**Eastern University, Sri Lanka**

**Faculty of Commerce and Management**

**External Degree**

**Part III Examination in Bachelor of Business Administration – 2015/2016**

**(Repeat)**

**EXB 401(b) – Taxation**

வினாக்கள்: 03 நேரம்: 1 1/2 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க பக்கங்கள்: 04

**எடுகோள்கள் ஏதாவது இருப்பின் தெளிவாக குறிப்பிடுக.**

1

நகரிலுள்ள "மணியம் ஸ்ரோர்ஸ்" எனும் பலசரக்கு விற்பனை நிலையம் திரு.சுப்பிரமணியத்துக்கு உரியது. 1990ம் ஆண்டிலிருந்து இதனை நடத்தி வருகிறார் 31.03.2017 ல் முடிவடைந்த வருடாண்டிற்கான இவரது தேறிய இலாபம் ரூ. 8,500,000/- ஆகும்.

**குறிப்புகள்**

தேறிய இலாபம் பின்வரும் வருமானம் /இலாபங்களையும் உள்ளடக்கியுள்ளது.

(அ) விநியோக வான் விற்பனை இலாபம் -150,000/-

(ஆ) களஞ்சியசாலை மூலம் மொத்த வாடகை - 300 000/-

(இ) தனது முந்திய தாரத்துக்கு பிறந்த (தற்போது தன்னோடு வாழ்கின்ற) 15 வயது மகனுக்கு தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள சேமிப்புக் கணக்கு மூலமான மொத்த வட்டி -150,000/- ( நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்படவில்லை)

(ஈ) விவசாய வருமானம் (வாழைத்தோட்டம் ) தேறிய வருமானம் 500,000/-

காணி கட்டிட ஆரம்ப மீதி (01.04.2016 அன்று) ரூ.15,000,000/-. இவை 1990ல் கொள்வனவு செய்யப்பட்டவையாகும். வ/ஆ 2016/2017 காலப்பகுதியில் புதிதாக ஒரு கடைத் தொகுதியை கட்டி 01.10.2017 லிருந்து வாடகைக்கு கொடுத்துள்ளார். புதிய கட்டிடத்தின் பெறுமதி ரூ.4,000,000/- (வ/ஆ 2016/2017 காலத்தில் பெற்ற மொத்த வாடகை 50000 × 6 = 300,000/-)

01.04.2016 ல் மோட்டார் வாகனங்களின் ஆரம்ப மீதி ரூ.6,500,000/- இது வ/ஆ 2014/2015ல் ரூ. 4,000,000/-க்கு கொள்வனவு செய்யப்பட்ட லொறி ஒன்றையும், விநியோகத் தேவைக்காக வ/-ஆ 2001/2002ல் ரூ.1,000,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்ட வேன் ஒன்றையும், இவைக்கு மேலதிகமாக கார் ஒன்றையும் உள்ளடக்கியுள்ளது.

மேற் குறிப்பிட்ட விநியோக வேன் 30.03.2017 அன்று விற்பனை செய்யப்பட்டு அதற்குப் பதிலாக 31.03.2017 அன்று ரூ.2,000,000/- க்கு பிறிதொரு புதிய வேன் கொள்வனவு செய்யப்பட்டு அன்றே வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டது.

விற்பனை செய்யப்பட்ட வேனுக்குரிய மொத்த பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூ.865,000/- ஆகும்.

01.04.2016 அன்று உள்ள தளபாட ஆரம்ப மீதியானது வ/ஆ-2013/2014ல் ரூ.200,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களையும் உள்ளடக்கியுள்ளது.

வ/ஆ 2016/2017ல் ரூ.50,000/- பெறுமதியான புதிய தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வியாபாரத்தில் பயன்படுத்தப்படுகிறது.

வ/ஆ 2016/2017 காலப்பகுதியுள் ரூ.200,000/- பெறுமதியான புதிய கணணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இது **உள்நாட்டிலே உற்பத்தி செய்யப்பட்டதாகும்.**

| | | |
|---|---|---|
| கட்டிடங்கள் | - | 70,000 |
| மோட்டார் வாகனங்கள் | - | 365,000 |
| தளபாடங்கள் | - | 50,000 |
| கணனி | - | <u>50,000</u> |
| மொத்தம் | | <u>535,000</u> |

7. திரு. சுப்பிரமணியம் கன்ரர் ரக வாகனமொன்றை வியாபாரத் தேவைக்காக மூன்று வ வடகை அடிப்படையில் த.பினான்ஸ் நிறுவனத்திடமிருந்து 01.10.2016 அன்று பெற்று ஈடுபடுத்தியுள்ளார்.
   இதன் மாதாந்த குத்தகை வாடகை ரூ.45,000/-
   வ/ஆ – 2016/2017க்கு செலுத்தப்பட்டுள்ள மொத்த குத்தகை வாடகை ரூ.375,000/

8. இவ் வ/ஆண்டு ரூ.140,000/- னை கட்டிடத்திற்குரிய சோலை வரியாகவும், திருத்தச் செலுத்தியுள்ளார். எவ்வாறாயினும் இதில் 15% ஆனது வாடகைக்கு கட்டிடத்துக்குரியதாகும்.

9. அறவிடமுடியாக்கடன் ஒதுக்கக் க/கு

| | | | | |
|---|---|---|---|---|
| க.பட்டோர் க/கு | | 10,000 | மீ.கீ.வ | 110,000 |
| மீ/கீ/ செ | | | விசேட ஒதுக்கம் | <u>70,000</u> |
| பொது ஒதுக்கம் | 155,000 | | | |
| விசேட ஒதுக்கம் | <u>85,000</u> | 240,000 | பொது ஒதுக்கம் | |
| | | ——— | இ.ந.க/கு | |
| | | <u>250,000</u> | | |

(அ). விசேட ஒதுக்க விபரம்

| <u>ஆரம்ப மீதி</u> | <u>ரூபா</u> | <u>இறுதி மீதி</u> | <u>ரூபா</u> |
|---|---|---|---|
| கமால் | 50,000 | கமால் | - |
| நிமால் | 20,000 | நிமால் | 20,000 |
| | | பாபு | 40,000 |
| | ——— | குமார் | <u>25,000</u> |
| | <u>70,000</u> | | <u>85,000</u> |

(ஆ). இவ்வாண்டுக்குரிய அ.மு.க ஒதுக்கம் ரூ.-40,000/-

(இ). ரூ.-30,000/-னது முந்திய வரிமதிப்பாண்டில் பதிவழிக்கப்பட்ட ஒரு தொ பலிக்கின்றது. இவ்வாண்டு திரு.முத்தையாவிடமிருந்து அறவிட வேண்டிய பதிவழிக்கப்பட்டது.

10. மோட்டார் வாகன திருத்தச் செலவான ரூ.175,000/- திரு. சுப்பிரமணியத்தின் காரின் தி செலவான ரூ.25,000/- யும் உள்ளடக்கியுள்ளது.

11. மின் மற்றும் தொலைபேசிக் கட்டணம் ரூ.148,000/- கும் இதில் 20 % னது இவரது த வதிவிடத்திற்குரியதாகும்.

12. காப்புறுதிக் கட்டணம் மொத்தம் ரூ. 700,000/- இது பின்வருமாறு செலுத்தப்பட்டது.
    திரு. சுப்பிரமணியத்தின் [illegible] 400,000/

"மணியம் ஸ்ரோர்ஸ்" நிறுவனத்திற்கான

| | |
|---|---|
| தீ மற்றும் இயற்கை அபாய காப்புறுதி | 150,000 |
| தனது மனைவியின் ஆயுள் மற்றும் மருத்துவ காப்புறுதி | 150,000 |
| | 700,000 |

இவ் வ/ஆ க்குரிய மொத்தப் புரள்வு ரூ. - 147,400,100/-

இ/ந/க/கு ன் படி செலுத்தப்பட்டுள்ள தே.க.வ (NBT) ரூ.- 1,560,500/-

வ/ஆ 2014/2015ல் இவர் தனது வியாபார மூலம் ரூ.850,000/- இனை தேறிய நட்டமாக எதிர்கொள்ள நேரிட்டது. எவ்வாறாயினும் வ/ஆ 2015/2016ல் ஈடுசெய்தது போக மீதி ரூ.195,000/- னை ஈடுசெய்யப்படாத நட்டமாக இவ் வ/ம ஆண்டுக்கு முன் கொண்டுவரப்பட்டுள்ளது.

திரு. சுப்பிரமணியத்தின் "மணியம் ஸ்ரோர்ஸ்"க்குரிய வ/ஆ 2016/2017 க்கான வி.இ.ந.க/கு பின்வரும் செலவுகளையும் கொண்டுள்ளது.

| | ரூபா |
|---|---|
| விளம்பரம் | 500,000 |
| ஆண்டு இறுதியில் வியாபார ஊழியர்களுக்கான களியாட்ட செலவு | 50,000 |
| வருமான வரி செலுத்தியது (வ/ஆ 2016/2017க்கு) | 195,000 |
| புகைப்பட பிரதியெடுத்தல் **இயந்திரக் கொள்வனவு** | 500,000 |

6. இவ் வ/ஆ னுள் திரு. சுப்பிரமணியத்தினால் மேற்கொள்ளப்பட்ட அன்பளிப்புத்தொகை ரூ.750,000/- பின்வருமாறு இடம் பெற்றுள்ளது.

| | ரூபா |
|---|---|
| யாழ் தேசிய வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலிகள் வழங்கியது | 350,000 |
| மானிப்பாய் சுப்பர் ஸ்டார் விளையாட்டு கழகத்திற்கு பணமாக | 50,000 |
| சாவகச்சேரியிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அற நிலையமொன்றுக்கு மலசல கூடம் அமைத்துக் கொடுத்தது | 350,000 |
| | 750,000 |

7. திரு.சுப்பிரமணியத்தின் முன்னைய மனைவிக்கு செலுத்திய தாபரிப்பு (Annuity) பணம் ரூ.200,000/-

**குறிப்பு:**

இலாப நட்டக் கணக்கிலுள்ள ஏனைய அனைத்து செலவுகளும் வரித்தேவைக்காக அனுமதிக்கத்தக்க செலவுகள் எனக் கொள்க.

விசேடமாக குறிப்பிடாத ஏனைய நிலையான சொத்துக்கள் அனைத்தும் வியாபாரத்தின் ஆரம்பத்திலேயே கொள்வனவு செய்யப்பட்டதாக கொள்க.

**நீங்கள் பின்வருவனவற்றை கணிப்பிடுமாறு வேண்டப்படுகிறீர்கள்.**

1. "மணியம் ஸ்ரோர்ஸ்" நிறுவனத்தின் சீர் செய்யப்பட்ட வியாபார இலாபம் (40 புள்ளிகள்)
2. திரு. சுப்பிரமணியத்தின் மொத்த நியதிச்சட்ட வருமானம் (05 புள்ளிகள்)
3. திரு. சுப்பிரமணியத்தின் மொத்த வருமதி வருமானம் (05 புள்ளிகள்)
4. திரு. சுப்பிரமணியத்தின் மொத்த வரிவதி வருமானம் (05 புள்ளிகள்)
5. வ/ஆ 2016/2017க்கு திரு. சுப்பிரமணியம செலுத்த வேண்டிய வரி (05 புள்ளிகள்)

**(மொத்தம்: 60 புள்ளிகள்)**

வினா 02.

குடிசார் பொறியியலாளரான திரு.பரம்சோதி அரச பொறியியல் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற "வரையறுத்த குடிசார் பொறியியல் நிபுணத்துவசேவை தனியார் நிறுவனம்'' எனும் நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் சொந்தமாக நடாத்தி வருகிறார். அத்தோடு வேறு தனியார் நிறுவனங்களுக்கு நிபுணத்துவ சேவையை வழங்கி வருகிறார்.

வ/ஆ 2016/2017 க்குரிய இவரது வருமானங்களும் இலாபங்களும் பின்வருமாறு இருந்தது.

| | ரூபா |
|---|---|
| ஓய்வூதிய பெறுகை | 1,020,000 |
| நிபுணத்துவ சேவை வருமானம் | 2,400,000 |
| வரையறுத்த குடிசார் பொறியியல் நிபுணத்துவசேவை தனியார் நிறுவனத்தின் - சீராக்கப்பட்ட இலாபம் | 1,500,000 |
| விவசாய வருமானம் (சீராக்கப்பட்டது) | 100,000 |
| | 5,020,000 |

இவர் வ/ஆ 2016/2017க்குரிய சரியான வரியினை செலுத்தி திரட்டு படிவத்தினையும் கணக்காய்வு கணக்கறிக்கை மற்றும் அதனோடிணைந்த ஆவணங்களையும் கடந்த 27.11.2017அன்று யாழ் இறைவரிப் பணிமனையில் முறைப்படி சமர்ப்பித்துவிட்டார்.

எவ்வாறாயினும் 2006ம் ஆண்டு 10ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 163(3) க்கு ஒரு கடிதத்துடன் (Letter of intimation) வரி மதிப்பீட்டு அறிவித்தல் ஒன்றையும் கடந்த 06.11 பெற்றுள்ளார்.

மேற்படி கடிதத்தில் "*.......வாடகை வருமானம் வெளிப்படுத்தப்படாமையால் உமது திரட் நிராகரிக்கப்பட்டு வரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது........*'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. பரம்சோதி உங்கள் அயல்வீட்டில் வசிப்பவராவார், அத்தோடு நீர் கிழக்குப் பல்கலை வணிகத்துறையில் ஓர் இறுதியாண்டு மாணவர் என்பதும் அவருக்கு தெரியும். இதன் காரணமா அவர் கூறுவதாவது "எனது பெயரில் கட்டிடங்கள் எதுவுமில்லை. ஆயினும், எனது மனைவி (திரு பரம்சோதி) க்குஅவரது பெற்றோரால் அன்பளிப்பு செய்யப்பட்ட ஒரு கட்டிடம் ஸ்ரான்லி வீதிய என்றும் அதனை மனைவி இலங்கை வங்கிக்கு வாடகைக்கு கொடுத்ததன் பேரில் கிடைக்கும் அவவே அனுபவிக்கிறார்...." என்றும், இக் காரணங்களினடிப்படையில் "மேன்முறையீடு" (Appe முடியுமா? என்று உம்மிடம் கேட்கிறார்.

**வினா:** "வலிதான மேன்முறையீடு" தொடர்பில் நீர் எவ்வாறு இவருக்கு ஆலோசனை கூறுவீர்.

**(மொத்தம்: 25**

**வினா 03.**

சிறுகுறிப்பு தருக

1. பெறுமதி சேர் வரி (VAT) யும், இவ் வரியில் மிக அண்மையில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய மாற்றங்களும்

(05

2. தகமைக் கொடுப்பனவுகளும் அவை தொடர்பான வரையறைகளும்

(05

3 "சுயமதிப்பீட்டு அடிப்படையில்" வரி செலுத்துதல்

(05

**(மொத்தம் 15**